செய்தி வெளியீடு எண்: 434 நாள்: 18.07.2019

## செய்தி வெளியீடு

## ‘சொற்குவைத்’ திட்டம் –அகராதியியல் விழிப்புணர்வுக் கருத்தரங்கம்

கல்லூரி மாணவர்களிடையே அகராதி குறித்த விழிப்புணர்வை உண்டாக்கும் வகையில், தமிழ்நாடு அரசு செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககமும், சென்னை, குருஸ்ரீ சாந்தி விஜய் ஜெயின் மகளிர் கல்லூரியும் இணைந்து நடத்தும் அகராதியியல் விழிப்புணர்வுக் கருத்தரங்கம் 19.07.2019–ஆம் நாள் வெள்ளிக்கிழமை அக்கல்லூரி வளாகத்தில் காலை 9.00 மணிக்குத் தொடங்கி நடைபெறவுள்ளது.

குருஸ்ரீ சாந்தி விஜய் ஜெயின் மகளிர் கல்லூரியின் முதல்வர் முனைவர் எம்.கே. மாலதி அவர்கள் வரவேற்புரையாற்ற, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கக இயக்குநர் திரு. தங்க. காமராசு அவர்கள் நோக்கவுரை நிகழ்த்தவுள்ளார்கள். மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழர் பண்பாடு மற்றும் தொல்லியல்துறை அமைச்சர் திரு. க. பாண்டியராசன் அவர்கள் சிறப்புரையாற்றவுள்ளார்கள். கல்லூரிக் கல்வி இயக்கக இயக்குநர் முனைவர் சி. சோதி வெங்கடேசுவரன் அவர்கள் வாழ்த்துரையும், குருஸ்ரீ சாந்தி விஜய் ஜெயின் மகளிர் கல்லூரியின் தாளாளர் மற்றும் செயலாளர் திரு. கௌதம் வைட் அவர்கள் வாழ்த்துரையும், கார்க்கி ஆராய்ச்சி நிறுவனத் தலைவர் முனைவர் மதன் கார்க்கி அவர்கள் கருப்பொருளுரையும் நல்க உள்ளார்கள். செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககப் பதிப்பாசிரியர் முனைவர் மா. பூங்குன்றன் அவர்கள் நன்றியுரை ஆற்றவுள்ளார்.

சொற்களைப் பாதுகாத்து மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு செல்வதே அகராதியின் முதன்மைப் பணியாகும். எனவே, அகராதியின் தேவையைக் கருத்தில் கொண்டே அகராதியியல் பற்றிய விழிப்புணர்வை இளந்தலைமுறையினர்க்கு ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் இந்த அகராதியியல் விழிப்புணர்வுக் கருத்தரங்கம் நடைபெறவுள்ளது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**